**கவனிக்க.**-2020.09.04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II பிரசுரிக்கப்படவில்லை.

# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2193 - 2020 සැප්තැම්බර් මස 11 වැනි සිකුරාදා - 2020.09.11

*2193 ஆம் இலக்கம் - 2020 ஆம் ஆண்டு செத்தெம்பர் மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)

# பகுதி I : தொகுதி (IIஆ) - விளம்பரங்கள்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | *1142* | உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள் | *1148* |
| கேள்விப்பத்திர முடிவுகள் பற்றிய அறிவித்தல்கள் | - | அந்நிய குடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள் | *1151* |
| பொருட்கள் விற்பனவும் பிறவும் | *1144* | ஏல விற்பனைகள் | *1153* |
| ஆய விற்பனையும் குத்தகையும் | *1146* | | - |


**கவனிக்க.**- (i) அரசியலமைப்புக்கான இருபதாவது திருத்தச் சட்டமூலம் 2020, ஓகத்து மாதம் 28 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(ii) பொருளாதாரச் சேவை விதிப்பனவு (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iii) நிதி (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(iv) துறைமுக, விமானநிலைய அபிவிருத்தி அறவீடு (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

(v) நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி (திருத்தம்) சட்டமூலம் 2020,செத்தெம்பர் மாதம் 04 ஆந் திகதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II இற்கு குறைநிரப்பியாக வெளியிடப்படுகின்றது.

## வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகுந் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முன்னர், அதாவது 2020, ஒற்றோபர் மாதம் 02 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2020, செத்தெம்பர் மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

***2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு***

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்.".

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2020 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

1141-B 82057-405 (2020/ 09)

# கேள்விப்பத்திர அறிவித்தல்கள்

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

## கிழக்கு மாவட்டத்திற்கு 13,000 கியுப்புக்கள் வழித்தட சரளைக் கற்கள்

### பெறுகை இல. SRS/ F.7717

01. தேசிய போட்டி ரீதியிலான விலைமனுக்கோரல் அடிப்படையில் பின்வரும் அமைவிடங்களுக்கு வழித்தட சரளைக் கற்களை வழங்குவதற்காக வழங்குனர்களிடமிருந்து இலங்கைப் புகையிரத சேவைகள் திணைக்கள பெறுகைக்குழுத் (உயர் மட்டம்) தலைவர் முத்திரையிடப்பட்ட விலைமனுக்களை பெற்றுக் கொள்வார். இந்த விலைமனுக்கள் கீழே குறிப்பிடப்பட்டுள்ள ஒவ்வொரு அமைவிடத்திற்கும் தனித்தனியாக மதிப்பீடு செய்யப்பட்டு ஒப்பந்தம் வழங்கப்படும்.

| அம்ச இல. | அமைவிடம் | கியுப் களின் எண்ணிக்கை | ஒப்படைக்கும் காலப்பகுதி (மாதங்களில் ) |
|---|---|---|---|
| 01. | மாஹோ | 1,000 | 06 |
| 02. | சியம்பலங்கமுவ | 500 | 04 |
| 03. | ரங்முக்கம | 500 | 04 |
| 04. | நேகம | 500 | 04 |
| 05. | அவுக்கன | 500 | 04 |
| 06. | ஹொரிவில | 500 | 04 |
| 07. | ஹபரண | 1,000 | 06 |
| 08. | 134M 40ch ஹபரணவிற்கும் கல்ஓயவிற்குமிடையில் | 500 | 04 |
| 09. | 149AM 60ch கல்ஓயவிற்கும் கந்தளாயிற்குமிடையில் | 500 | 04 |
| 10. | 153M 60ch கல்ஓயவிற்கும் கந்தளாயிற்குமிடையில் | 500 | 04 |
| 11. | அக்போபுர | 500 | 04 |
| 12. | தம்பலகாமம் | 1,000 | 06 |
| 13. | சீனன்குடா | 2,000 | 10 |
| 14. | திருகோணமலை | 2,000 | 10 |
| 15. | மன்னம்பிட்டி | 1,000 | 06 |
| 16. | அசேலபுர | 500 | 04 |

02. 19,000 ரூபாவை (பத்தொன்பதாயிரம்) மாத்திரம் மீளளிக்கப்படாத ஆவணக்கட்டணமாகச் செலுத்திய பின்னர் 2020.09.17 ஆந் திகதியன்று பி.ப. 3.00 மணி வரையும் புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்திலிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களில் மாத்திரமே விலைமனுக்கள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

03. 2020.09.18 ஆந் தியதியன்று பி.ப. 2.00 மணிக்கு விலைமனுக்கள் மூடப்படும்.

04. விலைமனுதாரரர்கள் இலங்கை ரூபாவில் ஒன்பது இலட்சத்து எழுபத்தையாயிரத்தை மாத்திரம் (ரூபா 9,75,000.00) விலைமனுப்பிணைத்தொகையாக அவர்களின் விலைமனுவின் பகுதியொன்றாக வழங்கல் வேண்டும்.

05. விலைமனுக்கள் அவைகளை மூடியபின்னர் உடனடியாகவே புகையிரத களஞ்சியசாலைகளின் அத்தியட்சகரின் அலுவலகத்தில் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் வேளையில் சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்ளப்படுகின்றனர்.

06. முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் பதிவுத் தபாலில் அல்லது நேரடியாகவோ பின்வரும் முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும் .

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு,(உயர் மட்டம்)
இலங்கைப் புகையிரத சேவைகள்,
புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

07. புகையிரத களஞ்சியசாலைகள் அத்தியட்சகரின் அலுவலகத்தில் விலை மனுக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சிக்கப்படலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 /
94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.
மின்னஞ்சல் : srs.slr.@ gmail.com
இணையத்தளம் : www. railway.gov.lk

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு, (உயர்மட்டம்),
இலங்கைப் புகையிரத சேவைகள்.

பெறுகை இலக்கம்.- SRS/F. 7717

9- 310

## இலங்கைப் புகையிரத சேவைகள்

## பெறுகை அறிவித்தல்

## இலங்கைப் புகையிரத சேவையின் கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் இலத்திரனியல் கணினி அட்டவணை அமைப்பை பராமரித்து அந்த இலத்திரனியல் கணினி நேர அட்டவணை அமைப்பிற்கு உரிய LED இலத்திரனியல் திரையின் இரு பக்கமும் இலத்திரனியல் திரையின் மூலம் விளம்பரங்களை பிரசாரப்படுத்துவதற்கு குத்தகைக்குப் பெறுவதற்கான பெறுகை. SRS/F.7736

இலங்கைப் புகையிரதத் திணைக்களம் சார்பாக திணைக்களப் பெறுகைக் குழுவின் தலைவரால் இரண்டு (02) வருட காலத்திற்கு கொழும்பு கோட்டை, புகையிரத நிலையத்தின் இலத்திரனியல் கணினி அட்டவணை அமைப்பை பராமரித்து இலத்திரனியல் கணினி நேர அட்டவணை அமைப்பிற்கு உரிய LED இலத்திரனியல் திரையின் இரு பக்கமும் 8' x4' அளவான இரத்திரனியல் திரைகள் 02 வீதம் 04 இலத்திரனியல் திரைகளை அல்லது விண்ணப்பதாரியின் செலவில் அந்த LED இலத்திரனியல் திரைகளில் காணப்படும் விதத்தில் மாற்றி இவ் LED இலத்திரனியல் திரைகளில் ஒரு பக்கம் 8'X8' அளவான இலத்திரனியல் திரை 01 வீதம் இலத்திரனியல் திரைகள் 02 இனை காட்சிப்படுத்துவதற்கான கீழே தரப்பட்டுள்ள தகைமையுள்ள கேள்விதாரர்களிடமிருந்து பொறிக்கப்பட்ட பெறுகை கேள்விப்பத்திரங்கள் கோரப்படுகின்றன.

01. **கேள்வி கோரல் :** தேசிய போட்டி கேள்வி கோரல் முறைமையின் மூலம் செயற்படுத்தப்படும்.

02. **தகைமைகள் :** குறித்த துறையுடன் சம்பந்தப்பட்ட வியாபாரமாக செல்லுபடியாகும் பதிவு இருத்தல் வேண்டும். அதற்காக ஒரு வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

03. **கேள்வி விண்ணப்பங்களைப் பெற்றுக்கொள்ளல் :** ஆர்வமுள்ள கேள்விதாரர்களுக்கு முழுமையான பெறுகை ஆவணங்களை, எழுத்து மூல வேண்டுதலை புகையிரத களஞ்சிய அதிகாரியிடம் சமர்ப்பித்த பின்பு, புகையிரத தலைமையகத்தின் பிரதான நிதி அதிகாரியிடம் மீளளிக்கப்படாத கேள்விப் படிவக் கட்டணமாக ரூபா 1000.00 தொகையைச் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டைச் சமர்ப்பித்து 2020, செத்தெம்பர் 21 ஆந் திகதி பி.ப. 3.00 மணிவரை கீழ்க்காணும் முகவரியில் பெற்றுக் கொள்ளலாம்.

புகையிரதக் களஞ்சிய அதிகாரி அலுவலகம்,
இலங்கைப் புகையிரதத் திணைக்களம்,
த.பெ.1347,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

04. **கேள்வி பிணைமுறி**: கேள்விதாரர்களால் மீளளிக்கப்படும், கேள்விப் பிணைமுறியாக ரூபா 10,000.00 தொகையைப் புகையிரத நிலையத்தின் பிரதான நிதி அதிகாரியிடம் செலுத்திப் பெற்றுக் கொண்ட பற்றுச் சீட்டை கேள்வி ஆவணங்களுடன் சமர்ப்பித்தல் வேண்டும்.

05. **கேள்விகளை ஏற்றுக் கொள்ளல் மற்றும் திறத்தல்:** 2020, செத்தெம்பர் 22 ஆந் திகதி பி.ப. 2.00 இற்கு மேற்படி 03 ஆம் பந்தியில் தரப்பட்டுள்ள புகையிரத களஞ்சிய அதிகாரியின் அலுவலகத்தில் விண்ணப்பங்கள் திறக்கப்படுவதுடன் அவ்வேளையில் விண்ணப்பதாரிக்கு அல்லது அவரது அங்கீகாரம் பெற்ற பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்க வாய்ப்பளிக்கப்படும்.

06. இலங்கைப் புகையிரத சேவையின் சகல ஊழியர்களும் அவர்களின் கணவர்/ மனைவி அவர்களது குடும்பத்தின் நெருங்கிய அங்கத்தவர்கள் (தந்தை, தாய், சகோதர சகோதரிகள், பிள்ளைகள்) விண்ணப்பங்களைச் சமர்ப்பிக்க உரித்துரிமை இல்லை.

07. கேள்வி சமர்ப்பிப்பதற்கு முன்பு மேற்படி கொழும்பு கோட்டை புகையிரத நிலையத்தின் இலத்திரனியல் கணினி நேர அட்டவணை அமைப்பைப் பரிசீலிப்பதற்காக விண்ணப்பதாரிகளுக்கு வாய்ப்பு அளிக்கப்படுவதுடன் அதற்காக புகையிரத திணைக்களத்தின் பிரதி அதிகாரி (விற்பனை மற்றும் சந்தைப்படுத்தல்) இடம் அனுமதியைப் பெற்றுக் கொள்ளல் வேண்டும்.

08. திணைக்கள பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும்.

09. கேள்விதாரர்களுக்குத் தேவையான மேலதிக விபரங்களை புகையிரத களஞ்சிய அதிகாரியின் அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

தொலைபேசி இலக்கங்கள் : 94(11) 2438078 அல்லது 94(11)2436818.
தொலைநகல் இல. : 94(11) 2432044.

தலைவர்,
திணைக்களப் பெறுகைக் குழு.

புகையிரத தலைமையகம்,
ஒல்கொட் மாவத்தை, கொழும்பு -10.

9- 311

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

## *நீதிவான் நீதிமன்றம் - யாழ்ப்பாணம்*

*நீதிமன்றினால் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பொருட்களின் பகிரங்க ஏல விற்பனை*

*யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் பின்வரும் வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்டதும் இதுவரை உரிமை கோரப்படாததுமான பின்வரும் பொருட்கள் 2020.10.10 ஆந் திகதிகளில் இந்நீதிமன்ற வளாகத்தினுள் வைத்து காலை 9.30 மணிக்கு பகிரங்க ஏலத்தில் விற்கப்படும்.*

*2. எவரேனும் ஒருவர் இங்கு குறிப்பிடப்பட்டுள்ள ஏதாவது பொருட்களை உரிமை கோருமிடத்து அவர் விற்பனை தொடங்குவதற்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு தமது கோரிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.*

*3. பொதுமக்கள், மன்றின் பதிவாளரின் அனுமதியுடன் விற்பனைக்கு அரை மணித்தியாலத்திற்கு முன்பு பொருட்களைப் பார்வையிடலாம்.*

*4. ஏல விற்பனையின்போது விற்பனைக்காக வைக்கப்பட்டுள்ள ஏதாவது பொருட்களின் மதிப்பு விலை கிடைக்காதவிடத்து அப் பொருளின் ஏல விற்பனையை மீளப் பெறும் உரிமையை மன்று தன்னகத்தே வைத்திருக்கும்.*

*5. விற்கப்பட்ட பொருட்களுக்கு பணத்தை உடன் செலுத்தி பொருட்களை உடனடியாக நீதிமன்ற வளவில் இருந்து அகற்ற வேண்டும். எல்லாக் கொடுப்பனவும் காசாகவே செய்யப்பட வேண்டும். காசோலைகள் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.*

*ஏ. பீட்டர் போல்,*
*நீதிவான்,*
*நீதிவான் நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம் .*

*நீதிவான் நீதிமன்றம்,*
*யாழ்ப்பாணம்.*

**துவிச்சக்கர வண்டிகள், தொலைக்காட்சிப் பெட்டி, கையடக்கத் தொலைபேசி, தண்ணீர் மோட்டார் மற்றும் சவள்கள், மண்வெட்டி போன்ற பொருட்கள்**

| *தொடர் இல.* | *வழ. இல.* | *சான்றுப் பொருள் இல.* | *சான்றுப்பொருள் விபரம்* | *எண்ணிக்கை* |
|---|---|---|---|---|
| 01. | B/236/12<br>27588 | 20/12 | 557622<br>*(சைக்கிள்)* | 01 |
| 02. | B/948/PC/17<br>MC/3134/PC/17 | 1500/17 | 69898775<br>*(சைக்கிள்)* | 01 |
| 03. | B/275/12<br>34758 | 60/12 | இலக்கம் இல்லை<br>*(சைக்கிள்)* | 01 |
| 04. | B/620/13 | 05/13 | 55635298 *(சைக்கிள்)* | 01 |
| 05. | B/231/11<br>22389 | 79/11 | 56L62113<br>*(சைக்கிள்)* | 01 |
| 06. | B/351/07 | 211/07 | 01. 5713C933<br>02. 25557874<br>*(சைக்கிள்)* | 02 |

| தொடர் இல. | வழ. இல. | சான்றுப் பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 07. | B/437/14 | 25/14 | 69573901 (சைக்கிள்) | 01 |
| 08. | B/38/13<br>32209 | 193/13 | 01. 55965849 (சைக்கிள்)<br>02. இலக்கம் இல்லை (சைக்கிள்) | 02 |
| 09. | B/1444/PC/18<br>MC/3329/PC/18 | 2086/17 | 70015167<br>(சைக்கிள்) | 01 |
| 10. | AR/1145/19 | 01. 1123/19<br>02. 1124/19<br>03. 1125/19<br>04. 1126/19<br>05. 1127/19<br>06. 1128/19 | 69866606<br>69824240<br>10009186<br>LU 03778<br>ÌL 054894<br>69992858<br>(சைக்கிள்) | 06 |
| 11. | 18356 | 69/10 | இலக்கம் இல்லை (சைக்கிள்) | 01 |
| 12. | AR/45/10 | 189/10 | 9004009 (சைக்கிள்) | 01 |
| 13. | B/93/06 | | 01. 0248617<br>02. 55952914<br>03. 68229697<br>04. N 511342<br>05. 56098312<br>06. 55714591<br>07. 55735754<br>08. தெளிவில்லை ((சைக்கிள்) | 08 |
| 14. | AR/362/13 | 156/13 | 56077836 (சைக்கிள்) | 01 |
| 15. | B/611/4PC/17<br>MC/519/PC/18 | 446/17 | 69960881 (லுமாலா சைக்கிள்) | 01 |
| 16. | AR/71/10 | 170/10 | 5610265<br>(சைக்கிள்) | 01 |
| 17. | B/581/11<br>34978 | 159/11 | 12271911<br>(சைக்கிள்) | 01 |
| 18. | B/220/07 | 130/07 | து.வண்டி (இலக்கம் இல்லை) | 01 |
| 19. | B/583/PC/18<br>MC/2224/PC/18 | 891/18 | TV றிமோட், இயபோன்<br>(LED Model Sony) | 01 |
| 20. | AR/1131/19 | 1453/19 | SAMSUNG GALAXY<br>போன் | 01 |
| 21. | B/348/S/19<br>MC/1967/S/19 | PR/444/19 | சவள் | 01 |
| 22. | B/421/S/19<br>MC/1575/S/19 | PR/455/19 | சவள் | 02 |
| 23. | B/95/S/19<br>MC/601/S/19 | PR/92/19 | சவள் | 01 |
| 24. | B/94/S/19<br>MC/600/S/19 | PR/91/19 | சவள் | 01 |
| 25. | MC/1483/S/16<br>B/1086S/15 | PR/33/15 | சவள்<br>மண்வெட்டி | 02<br>01 |
| 26. | MC/2226/S/16 | R/130/16 | சவள் | 01 |

| தொடர் இல. | வழ. இல. | சான்றுப் பொருள் இல. | சான்றுப்பொருள் விபரம் | எண்ணிக்கை |
|---|---|---|---|---|
| 27. | B/999/S/18<br>MC/743/S/19 | PR/1391/19 | சவள் | 03 |
| 28. | B/493/S/16<br>MC/2042/S/16 | PR/11/16 | சவள் | 01 |
| 29. | B/364/S/19<br>MC/1321/S/19 | PR/454/19 | சவள் | 02 |
| 30. | B/699/S/19<br>MC/1481/S/19 | PR/856/19 | சவள் | 02 |
| 31. | MC/1813/S/19 | PR/1217/19 | சவள் | 02 |
| 32. | MC/2872/S/19 | PR/2193/19 | சவள் | 01 |
| 33. | MC/1805/S/19 | PR/1216/19 | சவள் | 02 |
| 34. | B/713/S/18<br>MC/2110/S/19 | PR/1091/18 | சவள் | 01 |
| 35. | MC/2539/S/19 | PR/1880/19 | சவள் | 01 |
| 36. | MC/1910/S/19 | PR/1218/19 | சவள் | 01 |
| 37. | B/791/S/19<br>MC/1834/S/19 | PR/857/19 | சவள் | 03 |
| 38. | MC/1963/S/19 | PR/1355/19 | சவள் | 03 |
| 39. | B/815/S/13<br>34614 | PR/146/14 | 01. தண்ணீர் மோட்டார் இலக்கம் இல்லை<br>02. வயர் ரோல் | 01<br>02 |

*09-185*

---

## ஆய விற்பனையும் குத்தகையும்

### உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவு

### *2021 ஆம் ஆண்டுக்கான கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு வழங்கல்*

*2021 ஆம் ஆண்டிற்குரிய வகையில் 2020.08.20 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட புஸ்ஸெல்லாவ மற்றும் வஹூபிட்டிய கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுறும் வகையில் கேள்வி அறிவித்தல் விலை மனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி கள்ளுத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்துடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.*

*1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப்பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2021 ஆம் ஆண்டில் கள்ளு சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2020.09.28 ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.*

*2. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் காணப்படும் பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும். என்பதுடன்–*

*(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும், மற்றும்*

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி கள்ளுத் தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருத்தலும் கேள்விக்காரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

3. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரம்–

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு,

கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

4. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

5. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விக்காரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய கள்ளுத் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைக் கொத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

7. மேலதிக விபரங்களை இவ்வலுவலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ. ரீ.என். தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை,
2020.08.31.

**அட்டவணை**

*2021 ஆம் ஆண்டிற்கான கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட கள்ளுத் தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. வஹுக்கப்பிட்டிய கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த வஹுக்கப்பிட்டிய கிராமத்திற்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.09.28ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை | 1,500.00 |
| 2. புஸ்ஸெல்லாவ கள்ளுத் தவறணை | உடபலாத்த | உடபலாத்த புஸ்ஸெல்லாவ நகரத்தின் எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.09.28ஆந் திகதி மு. ப. 10.30 மணிவரை | 3,000.00 |

9-405/1

---

# உத்தியோகத் தொடர்பற்ற அறிவித்தல்கள்

## கம்பனியின் பெயர் மாற்றம் தொடர்பான பொது அறிவித்தல்

இக் கம்பனியின் பெயரானது 2020.07.30 ஆந் திகதியிலிருந்து மாற்றப்பட்டுள்ளதென 2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் பிரகாரம் அறிவிக் கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : பியர் த்ரீ ஹன்ட்ரட் என்ட் சிக்ஸ்டி (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் புதிய பெயர் : பியர் த்ரீ ஹன்ட்ரட் என்ட் சிக்ஸ்ட் டிரெவல் (பிறைவட்) லிமிட்டட்
கம்பனியின் இலக்கம்: பீவீ 00207832
பதிவு முகவரி: 3/16, ஆலய வீதி, நுகேகொடை.

மரியட்டா சிரிவர்தன,
கம்பனிச் செயலாளர்.

9- 182

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : லீப்ஸ்டிட்ச் டெக்னொலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00225747
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.11
பதிவு முகவரி : இல. 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்த, ராஜகிரிய.

கம்பனிச் செயலாளர்கள்.

9- 204

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(2) ஆம் பிரிவின் கீழ் பின்வரும் கம்பனியின் பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் முன்னைய பெயர் : எல்.ஓ.எல்.சீ. ப்ரொபர்டி நைன் (பிறைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பிவீ 131209
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.07.29
பதிவு முகவரி: 100/1, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை, இராஜகிரிய.
கம்பனியின் புதிய பெயர் : எல்.ஓ.எல்.சீ. இக்கோ டெக்னொலொஜீஸ் (பிறைவட்) லிமிட்டட்

கம்பனிச் செயலாளர்கள்.

9- 205

---

## பொது அறிவிப்பு

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் பிரிவு இன் படி பின்வரும் நிறுவனம் 2020 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 15 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்டது என்று அறிவிப்பு வழங்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சீ. சீ. சீ.ரெசிடென்சஸ் மெனேஜ்மென்ட் கோர்பரேஷன் (ப்ரீவீட) எல்டீடி
நிறுவனத்தின் இல.: பீவீ 00225930
பதிவுசெய்யப்பட்ட முகவரி: இல. 137, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு 2

ஜேசீ என்ட் கம்பனி,
கம்பனியின் செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா எவன்யு,
கொழும்பு 7.

9- 208

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் ,பின்வரும் கம்பனி கூட்டிணைக் கப்பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சஞ் போல் எம் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00225905
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020,ஓகத்து 14
பதிவு முகவரி: இல. 415, பிரின்ஸ் ஒப் வேல்ஸ் அவின்யு, கிறேண்ட்பாஸ், கொழும்பு 14

ஜேசீ என்ட் கம்பனி,
கம்பனியின் செயலாளர்கள்.

இல. 9/5, தம்பையா எவன்யு,
கொழும்பு 7.

9- 209

---

## பொது அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 244(3) ஆம் பிரிவின் கீழ் ஃபிளிக்ஸ் 11 (பிரைவட்) லிமிட்டட், பதிவு இல. PB 145 PV மற்றும் ஃபிளிக்ஸ் 11 டெக்னோலொஜீஸ் (பிரைவட்) லிமிட்டட் பதிவு இல. PV 1728 கம்பனிகளின் கூட்டிணைப்பு பூர்த்தியாக்கப்பட்டதாக இத்தால் அறியத்தரப்படுகிறது.-

கூட்டிணைக்கப்பட்ட கம்பனியின் பெயர் : ஃபிளிக்ஸ் 11 (பிரைவட்) லிமிட்டட்
திகதி: 2020, ஓகத்து 10

கோர்ப்பரேட் அட்வைசரி
சேர்விசஸ் (பிரைவேட்)
லிமிடெட்,
கம்பனியின் செயலாளர்கள்.

9- 217

---

## அறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1) ஆம் பிரிவின் கீழ் வரையறுக்கப்பட்ட பொறுப்புக் கம்பனிகளின் கூட்டிணைத்தல் பற்றிய பொது அறிவித்தல்.-

கம்பனியின் பெயர் : டோக்ஸ். எல்கே(பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல.: பீவீ 00223419
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.06.27
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.221, அனகாரிக தர்மபால மாவத்தை, தெஹிவளை

கம்பனியின் பெயர் : லக்ஸ்டோன்ஸ் இன்டர்நெஷனல் (பிரைவட்) லிமிட்டட்
கம்பனியின் இல.: பீவீ 00226021
கூட்டிணைக்கப்பட்ட திகதி: 2020.08.17
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல.19/5, கங்காராம ரோட், வேரஹெர, பொரலஸ்கமுவ

செயலாளர்.

9- 244

---

## கமால் கேபிள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட் கம்பனியின் பதிவு இல.PV 3947

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 346(1) ஆம் பிரிவின் கீழான கலைப்பாளர் நியமனம் பற்றிய அறிவித்தல்

கம்பனியின் பெயர் : கமால் கேபிள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : கந்தவள மாவத்தை, ரத்மலான.

நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: CHC/64/2019/CO
கம்பனி கலைப்பாளரின் பெயர்: Pinchabaduge Eksiri Aruna Jayewickreme &Gerard Jeevananthan David
முகவரி: Liquidators Level 3, No. 11, Castle Lane, Colombo 4
நியமனத் திகதி: 2020.06.11

9- 276/1

---

## கமால் கேபிள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
## கம்பனியின் பதிவு இல.PV 3947

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் XII ஆம் பிரிவின் கீழான கம்பனி கலைப்பு அறிவித்தல்

கம்பனியின் பெயர் : கமால் கேபிள்ஸ் (பிரைவேட்) லிமிட்டட்
பதிவு செய்யப்பட்ட அலுவலக முகவரி : கந்தவள மாவ த்தை, ரத்மலான.
நீதிமன்றம்: வர்த்தக உயர் நீதிமன்றம், மேல் மாகாணம், கொழும்பு (குடியியல்)
வழக்கு இல.: CHC/64/2019/CO
நீதிமன்ற கட்டளைத் திகதி : 2020.06.11
கோரிக்கை தாக்கல் செய்த திகதி : 2019.08.08
கம்பனி கலைப்பாளர் பெயர்: Pinchabaduge Eksiri Aruna Jayewickreme&Gerard Jeevananthan David
முகவரி: Liquidators Level 3, No. 11, Castle Lane, Colombo 4.

9- 276/2

---

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : சிலோன் கைட்கார்டன் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00224604
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 4519/3, எல்விட்டிகல மாவத்தை, கொழும்பு 5
கூட்டிணைப்புத் திகதி: 2020.07.20

பணிப்பாளர்.

9- 358

---

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் : யோகி சீட் (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00224904
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 11/7, முதலாம் ஒழுங்கை, விஜய மாவத்தை, மினுவன்கொடை.
கூட்டிணைப்புத் திகதி: 2020.07.25

பணிப்பாளர்.

9- 359

---

## பொதுஅறிவித்தல்

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 9(1)ஆம் பிரிவின் கீழ், பின்வரும் கம்பனி கூட்டிணைக்கப் பட்டுள்ளதென அறிவிக்கப்படுகின்றது.-

கம்பனியின் பெயர் :டையமன்ட் பெர்ல் லங்கா (பிரைவட்) லிமிட்டட்
பதிவிலக்கம்: பீவீ 00224519
பதிவு செய்யப்பட்ட முகவரி : இல. 134/ஏ, ரெமுன அங்குருவாத்தொட்ட
கூட்டிணைப்புத் திகதி: 2020.07.19

பணிப்பாளர்.

9- 360

---

## அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

இத்தால், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் பொதுமக்களுக்கும் அறியத்தருவதாவது, 2011.11.21ஆந் திகதியிடப்பட்டு ஐக்கிய இராச்சியம் , லண்டன் சொலிசிட்டர் எஸ். கே. நாகேஸ்வரன் முன்னிலையில் மட்டக்களப்பு, றொசைறோ வீதி, இல. 07 ஐச் சேர்ந்த செல்வராஜா குமாரஜோதி என்பவரின் பெயரில் இல. 125, கெனல்வோர்த் கிரசன்ட், என்பீல்ட்,மிடில்செக்ஸ் ENI 3RG, ஐக்கிய இராச்சியத்தைச் சேர்ந்தவரான நளினி பகீரதன் (தி.மு.சத்தியநாதன்) ஆகிய என்னால் நிறைவேற்றப்பட்ட 19 ஆம் இலக்கப் புத்தகத்தில் 53 ஆம் இதழில் தொடர் இல. 498 இல் 2011.12.20 ஆந் திகதி மட்டக்களப்பு கிழக்கு வலயப் பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்ட விசேட அற்றோணித் தத்துவப் பத்திரம் 2020.07.20 ஆந் திகதி முதல் மீளப்பெறப்படுவதோடு இரத்தும் செய்யப்படுகிறது. இன்று முதல் அற்றோணித்தத்துவகாரரால் மேற்குறிப்பிட்ட அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் கீழ் மேற்கொள்ளப்படும் எந்தவொரு செயலுக்கும் நடவடிக்கைக்கும் நான் பொறுப்பாக மாட்டேன்.

நளினி பகீரதன் ( தி.மு. சத்தியநாதன்).

2020.07.20

9- 210

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பங்களாவத்த, லேவெல்ல, கண்டி, இல. 30/15 எனும் இடத்தில் வசிக்கும் அத்தநாயக முதியன்சேலாகே குமுதினி சாமலி அத்தநாயக (தே.அ.அ.இல. 598243662V) மற்றும் இல. 30/ 15, பங்களாவத்த, லேவெல்ல எனும் இடத்தில் வசிக்கும் ரணசிங்ஹ ஆராச்சிகே ரஞ்சித் வீரசிரிகே (தே.அ.அ.இல. 533581412V) பிரசித்த நொத்தாரிசு பி.எம். சந்திரதாச அவர்களால் 2019ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 11 ஆந் திகதி எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்ட 46 ஆம் இலக்கம் கொண்ட விசேட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்பட்டதாகவும், இன்று முதல் இந்த அற்றோணித் தத்துவத்தின் மூலம் செய்யப்படும் எந்த ஒரு செயற்பாடுகளுக்கும் கொடுக்கல் வாங்கல்களுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இதன் மூலம் அறியத்தருகின்றேன்.

குமுதினி சாமலி அத்தநாயக
மற்றும் ரஞ்சித் வீரசிரிகே.

2020.08.10.

9- 227

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

பொரலெஸ்முவை, லேக் வீதி, முதலாம் ஒழுங்கை, இல. 37/4ஏ எனும் முகவரியில் வசிக்கும் இம்புல்பிட்டியலாகே சானக சம்பத் உதய குமார (தே.அ.அ.இல. 800090822V) ஆகிய நான், தம்பதிவ ஹேவதேவகே லஷானி பிரபோதிகா (தே.அ.அ.இல. 198871700592) என்பவருக்கு பிரசித்த நொத்தாரிசு புஷ்பதேவ ஜானகசேமரத்ன என்பவரால் அத்தாட்சிப்படுத்தப்பட்ட 4624ஆம் இலக்கமுடைய 2017.07.20 ஆந் திகதிய அற்றோணித் தத்துவப் பத்திரத்தின் மூலம் வழங்கப்பட்ட அற்றோணித் தத்துவம் இரத்துச் செய்யப்பட்டு இல்லாதொழிக்கப்படுவதாகவும் அற்றோணித் தத்துவகாரரான தம்பதிவ ஹேவதேவகே லஷானி பிரபோதிகா என்பவரால் மேற்கொள்ளப்படும் ஏதேனும் நடவடிக்கைக்கு நான் பொறுப்பாளியல்ல என்றும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் அறிவித்துக் கொள்கின்றேன்.

இம்புல்பிட்டியலாகே சானக
சம்பத் உதய குமார.

9- 361

---

### அற்றோணித் தத்துவத்தை இரத்துச் செய்தல்

கொழும்பு, பன்னிப்பிட்டிய , எருவ்வல வீதி, இலக்கம் 117/3 ஐச் சேர்ந்தவரும், தற்போது இலக்கம் 73, பிளஸ்டி வீதி, எயிப் மைல் பிளேயின்ஸ் குவீன்ஸ்லண்ட் 4113 ,அவுஸ்திரேலியாவில் வசிப்பவருமான சாரங்க மஹீ ரணசிங்க ஆகிய நான், இலங்கை, கொழும்பு, பன்னிப்பிட்டிய, எருவ்வல வீதி, இலக்கம் 117/3 ஐச் சேர்ந்த ரணசிங்க ஆரச்சிகே ஹென்றி ரணசிங்கவிற்கு கொழும்பு பிரசித்த நொத்தாரிசு திருமதி ஜெனிபர் ஆர். புரொக்டரினால் எழுதி அத்தாட்சிப்படுத்தப்பட்டு வழங்கப்பட்ட , மேலும் கொழும்பு பதிவாளர் நாயகத் திணைக்களத்தில் இலக்கம் 323 காண்டத்தில் 108 ஆம் ஏட்டு ஓலையில் 3463 ஆம் நாட்குறிப்பேட்டின் கீழ் 2006, பெப்புருவரி மாதம் 28 ஆந் திகதி பதிவு செய்யப்பட்டுள்ள 59 ஆம் இலக்கமுடைய அற்றோணித் தத்துவத்தை இத்தால் செல்லுபடியற்றதாக்கினேன் என்பதை தெரிவித்துக் கொள்கின்றேன்.

மேலும் இத் திகதியின் பின்னர் எனது சார்பாக ரணசிங்க ஆரச்சிகெ ஹென்ரி ரணசிங்க செய்யும் எந்தவொருசெயலுக்கும் அல்லது கொடுக்கல் வாங்கலுக்கும் நான் பொறுப்புக் கூற மாட்டேன் என இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசுக்கும் அதன் பொது மக்களுக்கும் இத்தால் அறியத்தருகின்றேன்.

சாரங்க மஹீ ரணசிங்க,

2020, ஓகத்து 31.

9- 404

---

## அந்நியகுடிவகை உத்தரவுச்சீட்டு விண்ணப்பங்கள்

### உடபலாத்த பிரதேச செயலாளர்பிரிவு
### 2021 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு மதுபான தவறணைகளை
### மீண்டும் குத்தகைக்கு வழங்கல்

2021 ஆம் ஆண்டிற்குரிய வகையில் 2020.08.21 ஆந் திகதி மு.ப. 10.30 மணிக்கு உடபலாத்த பிரதேச செயலகத்தில் நடாத்தப்பட்ட வெளிநாட்டு குடிபானத் தவறணைகளை குத்தகைக்கு விடும் நடவடிக்கையின் போது கேள்வி அறிவித்தல் சபை திருப்தியுறும் வகையில் கேள்வி அறிவித்தல் விலை மனுக்கள் முன்வைக்கப்படாமையின் காரணமாக மேற்படி வெளிநாட்டு குடிபானத் தவறணைகளை மீண்டும் குத்தகைக்கு விட மதுவரிகள் ஆணையாளர் நாயகம் அவர்களால் தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்குரிய அறிவித்தல் மற்றும் நிபந்தனைகள் கீழே குறிப்பிடப்பட்டுள்ளன.

02. 1982 ஆம் ஆண்டு ஓகத்து மாதம் 20 ஆந் திகதிய 207 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டு விளம்பரப்படுத்தப்பட்ட 1983 ஆம் ஆண்டிற்கும் அதற்கு பிற்பட்ட காலப் பகுதிக்கும், ஏற்புடையதான வெளிநாட்டு மதுபான வகைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகளுக்கும், அக்காலப் பகுதியில் நடைமுறை வலுவுடையதான அனைத்து மதுவரி அனுமதிப்பத்திரங்களுக்கும் பொருந்தும் பொதுவான மதுவரி நிபந்தனைகளுக்கும் ஏற்ப 2021ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் குடிபான வகைகளை சில்லறைக்கு விற்கும் சிறப்புரிமைகளை வாங்குவதற்கு உடபலாத்த பிரதேச செயலாளரான என்னால் 2020.09.29ஆந் திகதி மு. ப. 10.30 மணி வரை கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளப்படும்.

03. அனைத்து கேள்விப்பத்திரங்களும் இலங்கையில் உள்ள பிரதேச செயலகங்களில் ஏதாவது ஒன்றில் பெற்றுக்கொள்ளும் விண்ணப்பப்படிவத்தில் தயாரிக்கப்படல் வேண்டும் ; என்பதுடன்–

(அ) கேள்விப் பிணைப்பணமாக கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிட்டு குறித்த பிணைப் பணத்தொகையை இலங்கையில் உள்ள ஏதாவது ஒரு பிரதேச செயலகத்தில் வைப்புப் பணமாக வைப்பிலிட்டு பெற்றுக் கொண்ட பற்றுச்சீட்டையும் ; மற்றும்

(ஆ) கேள்விப்பத்திரதாரரின் காணிகள் போன்ற அசையா சொத்துக்கள் அமைந்துள்ள பிரதேசத்தின் பிரதேச செயலாளரிடம் பெற்றுக் கொண்ட தனது சொத்துக்களைப் பற்றிய சான்றிதழ் ஒன்றையும் சமர்ப்பித்தல் வேண்டும்.

கேள்விப்பத்திரம் மற்றும் சொத்துக்கள் தொடர்பான சான்றிதழ்கள் சமர்ப்பிப்பது தொடர்பாக மேற்படி வெளிநாட்டு மதுபான தவறணைகளை குத்தகைக்கு விற்கும் நிபந்தனைகள் கோவையில் உள்ளடக்கப்பட்டுள்ள நியதிகளைச் சரியான முறையில் பின்பற்றப்பட வேண்டும் என கேள்விப்பத்திரங்களைச் சமர்ப்பிப்பவர்களிடம் இத்தால் ஆணித்தரமாக அறிவிக்கப்படுகிறது.

கேள்விப்பத்திரங்களை நிரப்பும்போது கேள்விப்பத்திரதாரர்கள் கீழ்வரும் தேவைப்பாடுகள் தொடர்பாக விசேட கவனம் செலுத்துதல் வேண்டும் :-

(i) கேள்விப்பத்திரங்கள் முழுமையாக நிரப்பப்படல் வேண்டும். அவ்வாறு நிரப்பும்போது அங்கு குறிப்பிடப்படும் தொகையை இலக்கத்திலும் எழுத்திலும் குறிப்பிடல் வேண்டும் ;

(ii) நிரப்பப்பட்ட கேள்விப்பத்திரங்களில் உரிய சாட்சியாளர்களின் கையொப்பம் இடப்பட்டிருத்தல் வேண்டும் ;

(iii) அனைத்து திருத்தங்களும் சொற்கள் வெட்டப்பட்டிருந்தாலும் கேள்விப்பத்திரதாரரின் சுருக்க கையொப்பம் மற்றும் திகதி இட்டு உறுதிப்படுத்தப்பட்டிருத்தல் வேண்டும்.

இங்கு நியதிகளுக்குப் புறம்பான வகையில் சமர்ப்பிக்கப்படும் கேள்விப்பத்திரங்கள் நிராகரிக்கப்படும்.

04. முறையாக நிரப்பிய கேள்விப்பத்திரங்கள்,-

(அ) கேள்வி வைப்புப் பணம் வைப்பிலிட்டுப் பெற்றுக்கொண்ட பிரதேச செயலகத்தின் பற்றுச்சீட்டு ; மற்றும்

(ஆ) சொத்துக்கள் பற்றிய சான்றிதழ்.

என்பன இணைக்கப்பட்டு கடித உறையொன்றில் இட்டு முத்திரையிட்டு, அத்தகைய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "தவறணையின் இலக்கமும் பெயரும்" குறிப்பிட்டு உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் கால எல்லை முடிவடைவதற்கு முன்பு இடுதல் வேண்டும். இல்லாவிட்டால் கேள்விப்பத்திரங்களை ஏற்றுக்கொள்ளும் காலவரையறை முடிவடைவதற்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளருக்கு கிடைக்கும்படி பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

05. ஒவ்வொரு குத்தகையும் தொடர்பாக கேள்விப்பத்திரங்கள் ஏற்றுக்கொள்ளும் முடிவு நேரம் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அத்தகைய நேரங்களில் அனைத்து கேள்விப்பத்திரதாரரும் உடபலாத்த பிரதேச செயலகத்திற்கு சமுகமளித்திருக்க வேண்டும்.

06. திருப்தியான கேள்விப்பத்திரத்தை முன்வைத்த கேள்விப்பத்திரதாரரின் "சிறப்புரிமைகளை வழங்கியவர்" என பிரகடனப்படுத்தப்பட்ட பின்னர் அன்றைய திகதி பி. ப. 2.30 மணிக்கு முன்பு உடபலாத்த பிரதேச செயலாளரினால் விதிக்கப்படும் பணத்தொகையொன்றை பிணைப்பணமாக உடபலாத்த பிரதேச செயலகத்தில் வைப்பிலிட்டு உரிய பிறநாட்டு மதுபான வகைகள் தவறணைகள் விற்பனை செய்யும் நிபந்தனைப் படிவத்தில் கையொப்பமிடல் வேண்டும். இக்கொடுப்பனவை ரொக்கப் பணமாகவோ அல்லது வங்கியொன்றினால் வழங்கப்பட்ட "கொடுப்பனவுக்காக" எனக் குறிப்பிட்ட காசோலை ஒன்றினால் அல்லது இலங்கை வங்கியிலோ அல்லது மக்கள் வங்கியிலோ வழங்கப்பட்ட "பாதுகாப்பான காசோலை" என அழைக்கப்படும் காசோலையினாலோ செலுத்தப்படல் வேண்டும்.

07. மேலதிக விபரங்களை உடபலாத்த பிரதேச செயலகத்தில் கேட்டு அறிந்துகொள்ளலாம்.

ஆர்.ஏ.டீ.ரி.என்.தென்னகோன்,
பிரதேச செயலாளர்,
உடபலாத்த.

பிரதேச செயலகம்,
உடபலாத்த,
கம்பளை.
2020.08.31.

**அட்டவணை**

*2021 ஆம் ஆண்டிற்காக கம்பளை உடபலாத்த பிரதேச செயலாளர் பிரிவில் அங்கீகரிக்கப்பட்ட வெளிநாட்டு மதுபான தவறணைகளின் பட்டியல்*

| தொடர் இலக்கமும் பெயரும் | பிரிவு | தவறணை அமைய வேண்டிய பிரதேசம் | தவறணை திறந்திருக்க வேண்டிய நேரங்கள் | கேள்விப்பத்திரம் ஏற்றுக் கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | கேள்வி வைப்புத் தொகை ரூ. ச. |
|---|---|---|---|---|---|
| 1. புஸ்ஸெல்லாவ வெளிநாட்டு குடிபானத் தவறணை | உடபலாத்த | புஸ்ஸெல்லாவ நகர எல்லைக்குள் | மு. ப. 11.00 மணியில் இருந்து பி. ப. 2.00 மணி வரை<br>பி. ப. 5.00 மணியில் இருந்து பி. ப. 8.00 மணி வரை | 2020.09.29 மு. ப. 10.30 மணி | 3,000 |

9- 405/2

# ஏல விற்பனைகள்

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

*1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கி களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் 9 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை*

**முதலாவது ஆதன இடாப்பு**

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், உடபொல மெதலச்ச கோரளே, தம்பதெனி ஹத்பத்துவ,பொல்கஹவெல பிரதேச சபை எல்லையில் அமைந்துள்ள பொல்கஹவெல பிரதேச செயலாளர் பிரிவில், இல. 888 என்ற தேவடகெதர கிராம அலுவலர் பிரிவில், ஹெனபொல கிராமத்தில் அமைந்துள்ள "பிடன்கனேவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நிலஅளவையாளர் ஏ. எம். எம்.பி. அதபத்து அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 276 மற்றும் 2010.06.17 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட லொட் இல.01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணியின் விஸ்தீரணம்
(0ஏ.0றூ.29.92பே.)
அல்லது 0.0757 ஹெக்டயார்

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகலவற்றோடும், இந்தக் காணி வடக்கு எல்லையில் அமைந் துள்ள வீதி உரிமையுடனும் , பாவிப்பு செய்யும் உரிமையுடனும், இந்தக் காணி குருநாகல் காணிப் பதிவகத்தில் T169/12 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**இரண்டாவது ஆதன இடாப்பு**

மேல் மாகாணம், கம்பஹா மாவட்டம், சியனே கோரளை, மெதபத்துவ, அத்தனகல்ல பிரதேச சபை எல்லையில் அமைந்துள்ள அத்தனகல்ல பிரதேச செயலாளர் பிரிவில்

இல. 332 என்ற வடந்தர கிராம அலுவலர் பிரிவில் வடத்தர கிராமத்தில் அமைந்துள்ள "கொஸ்கஹலந்த" அல்லது ஹெனே தெற்கு பக்கத்துண்டு என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி. பந்துதிலக அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 33828 மற்றும் 2018.06.03 ஆந் திகதியுடைய வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட லொட் இல. 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணியின் விஸ்தீரணம்
0ஏ.0றூ.16.50பே.
அல்லது 0.0418ஹெக்டயார்

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகலவற்றோடும், இந்தக் காணி அத்தனகல்ல காணிப் பதிவகத்தில் B500/85 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**மூன்றாவது ஆதன இடாப்பு**

வடமேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், வல்கம்பத்துவ கோரளை, தேவமெதி ஹத்பத்துவ, வாரியபொல பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள பமுணுகொடுவ பிரதேச செயலாளர் பிரிவில் இல. 1221 என்ற ஹோமாதகம கிராம அலுவலர் பிரிவில் ஹோமாதகம கிராமத்தில் அமைந்துள்ள "இதுபில்லேவத்த", " மில்லகஹமுலவத்த" அல்லது "ஹிடினா கெதரவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் ஜே. ஏ. ரோஹித ஜயலத் அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 2135 மற்றும் 2018.06.12 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட லொட் 01 என அடையாளமிடப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி.

இக்காணியின் விஸ்தீரணம்
0ஏ.2றூ.10பே.
அல்லது 0.2276 ஹெக்டயார்

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகலவற்றோடும், இந்தக் காணி குருநாகல் காணிப் பதிவகத்தில் E119/59 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

**நான்காவது ஆதன இடாப்பு**

வட மேல் மாகாணம், குருநாகல் மாவட்டம், பலதோர கோரளை, தேவமெதி ஹத்பத்துவ, கொபைகனே பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள இல. 1296 என்ற மிதேல்லாவ கிராம அலுவலர் பிரிவில் மிதேல்லாவ கிராமத்தில் அமைந்துள்ள "மீகஹமுலவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் பி.ஜி.பந்துதிலக அவர்களால் அளந்து தயாரிக்கப்பட்ட இல. 33827 மற்றும் 2018.06.04 ஆந் திகதியிடப்பட்ட வரைபடத்தில் விஸ்தரிக்கப்பட்ட லொட் இல. 01 என காண்பிக்கப்பட்டு பிரித்து வேறாக்கப்பட்ட காணிப்பகுதி

இக்காணியின் விஸ்தீரணம்
0ஏ.2றூ.22.5பே.
அல்லது 0.2563 ஹெக்டயார்

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள சகலவற்றோடும், இந்தக் காணி நிகவெரடிய காணிப் பதிவகத்தில் M54/78 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் கலன்குட்டிய, ஜய மாவத்தை,செனரத்ஸ்டோர்ஸ் என்ற முகவரியில் வசிக்கும் டிகிரி பண்டாகே காந்தி செனரத் டிகிரி பண்டா (தேசிய அடையாள அட்டை இல. 196735904956) மற்றும் யாபா முதியான்சேலாகே சந்திரலதா மெனிகே விஜேசிங்க ( தேசிய அடையாள அட்டை இலக்கம் 718142733V) (இங்கு இதன் பின்னர் ஏதாவதொரு இடத்திற்கு "பிணையாளி"யாக அறியப்படும்) அவர்களால் கம்பனி பதிவு இலக்கம் PB 676 PQ இல் உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ மூலம் (இதன் பின்னர் "யூனியன் பாங்க்" என அழைக்கப்படும் ) கடன் வசதிகளுக்காக ( இதன் பின்னர் "கடன் வசதி" என அறியப்படும்) பெற்றுக் கொண்டுள்ளதாலும், மேற்குறித்த யாபா முதியான்சேலாகே சந்திரலதா மெனிகே விஜேசிங்க அவர்களால், மேலே முதலாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட ஆதனத்தில் சம்பந்தப்பட்ட அநுராதபுர பிரசித்த நொத்தாரிசு எஸ்.கே. நதி ஆகாஷ் குரைரா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 8927 மற்றும் 2018.11.14 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட இரண்டாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணி சம்பந்தமாக அதே நொத்தாரிசு அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இல. 8923 மற்றும் 2018.11.13 ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறியின் பிரகாரம், மேலே குறிப்பிடப்பட்ட மூன்றாவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட ஈட்டுமுறி மற்றும் மேலே குறிப்பிடப்பட்ட நான்காவது ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்ட காணி சம்பந்தமாக அதே நொத்தாரிசு அவர்களால் உறுதிப்படுத்துப்பட்ட இல. 8919 மற்றும் 2018.11.13ஆந் திகதியிடப்பட்ட ஈட்டு முறி எழுதி கையொப்பமிட்டு, மேற் சொல்லப்பட்ட பண வசதிகளின் மீது யூனியன் பாங்க் மூலம் அறவிடப்பட வேண்டிய பணத்தொகை மற்றும் அதன்மீதுள்ள வட்டிகள் மீள அளிப்புச் செய்வதற்காக பொது பிணையாக வைத்து, மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விஸ்தரிக்கப்பட்டு காண்பிக்கப்பட்டுள்ள அசையா சொத்துக்கள் பிணையாக வைத்துள்ளதாலும் , யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ யினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் படி,

**இரண்டாவது ஆதன இடாப்பு**- 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி முற்பகல் 11.00மணிக்கு
**முதலாவது ஆதன இடாப்பு**- 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 21 ஆந் திகதி பிற்பகல் 2.30மணிக்கு
**நான்காவது ஆதன இடாப்பு**- 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி முற்பகல் 10.30மணிக்கு
**மூன்றாவது ஆதன இடாப்பு**- 2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆந் திகதி பிற்பகல் 1.00மணிக்கு

மேற் சொல்லப்பட்ட காணிகளை எங்களால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**இரண்டாவது காணிக்கு செல்லும் விதம்.**- வேயன்கொட நகரத்தில் இருந்து நீர்கொழும்பு பாதையில் 1.4 கிலோ மீற்றர்

பிரயாணம் செய்யும் பொழுது வடந்தர பன்சலைக்கு 100 மீற்றருக்கு முன்னர் உள்ள பாரமுல்ல வீதியில் இடது பக்கம் திரும்பி ஒரு கிலோ மீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது இடது பக்கம் உள்ள போரலு பாதையில் திரும்பி முன்நோக்கி பிரயாணம் செய்யும் பொழுது வாகனம் திருத்தும் கராஜ் ஒன்றுள்ள இடத்தைத் தாண்டிச் செல்லும் போது 100 மீற்றர் பிரயாணம் செய்யும் போது, இந்தக் காணி வீதியின் வலது பக்கம் அமைந்துள்ளது.

**முதலாவது காணிக்கு செல்லும் விதம்**.- குருநாகலில் இருந்து பொல்கஹவெல வீதியில் பொதுஹர சந்தி வரை சென்று, அந்தச் சந்தியில் இடது பக்கத்தில் உள்ள வாதாகட வீதியில் 3 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, ஹேனேபொல கிராமம் வரை சென்று, அங்கிருந்து வலது பக்கம் உள்ள கொங்கிறீட் வீதிக்குத் திரும்பி 300 மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது குறித்த காணி இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**முன்றாவது காணிக்கு செல்லும் விதம்**.- குருநாகலில் இருந்து நீர்கொழும்புப் பாதையில் கொட்டகஸ் சந்தி வரை சென்று, வலது பக்கத்திற்குத் திரும்பி ரத்மலே வீதியில் 3 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, கொட்டகஸ் பன்சல வீதியில் 0.5 கிலோ மீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது இந்தக் காணி இடது பக்கத்தில் அமைந்துள்ளது.

**நான்காவது காணிக்கு செல்லும் விதம்**.- குருநாகலில் இருந்து சிலாபம் வீதியில் வாரியபொல ஊடாக ஹதபொல சந்தி வரை சென்று, வலது பக்கம் திரும்பி கொபைகனே வீதியில் 03 கிலோமீற்றர் பிரயாணம் செய்யும் பொழுது வலது பக்கம் திரும்ப, அந்த வீதி மிதேல்லவ வரை 1.5 கிலோமீற்றர் வரை பிரயாணம் செய்யும் பொழுது, இந்தக் காணி வீதியின் வலது பக்கத்தில் அமைந்துள்ளது.

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;

(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகுப் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);

(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100%;

(6) இலிகிதர் கட்டணம் 1,500.00 ரூபா ;

(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500.00 ரூபா .

**வேறு விபரங்களுக்கு**.-"சட்டப்பிரிவுத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு -03".

தொலைபேசி இல.: 0112374100.

எல் .பீ. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல்
மாகாணம் கொழும்பு மாவட்ட
நீதிமன்றம் அரச மற்றும்
வர்த்தக வங்கி ஆகியவற்றுக்கான
நீதிமன்ற ஆணையாளர்.

இல. 200,2 ஆவது மாடி,
புதுக்கடை வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி /தொலைநகல் இல. : 077- 3242954,
011-2445393.

9-237

---

## யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ

பகிரங்க ஏல விற்பனை

1990 ஆம் ஆண்டின் 4 ஆம் இலக்கமுடைய வங்கி களினால் வழங்கப்பட்ட கடன்களை மீள அறவிடப்படல் 4 ஆவது சிறப்பு சட்டப்படி ஏல விற்பனை விளம்பரம்

### ஆதன இடாப்பு

மேல் மாகாணம், கொழும்பு மாவட்டம், அளுத்குரு கோரளை, துணகஹ பத்து, கட்டான பிரதேச சபை எல்லையினுள் மற்றும் பிரதேச செயலாளர் பிரிவில் இலக்கம் 161 இடப்பட்ட கிழக்கு மஹனுபிட்டிய கிராம அலுவலர் பிரிவில் மாஹுனுபிட்டிய ஊரில் அமைந்துள்ள "தலடகஹவத்த" என்ற பெயருடைய காணிக்கு அதிகாரம் பெற்ற நில அளவையாளர் டபிள்யு. எஸ். எஸ். பெரேரா அவர்களால் அளவையிடப்பட்டு தயாரிக்கப்பட்ட இலக்கம் 7774/ 1 மற்றும் 2015, யூலை 11 அந் திகதியிடப்பட்ட வடைரபடத்தின் பிரகாரம் பகிர்ந்து ஒதுக்கப்பட்ட லொட் 01 இடப்பட்ட காணி.

இக்காணியின் விஸ்தீரணம்
0ஏ.0றூ.39.10பே.

விசாலமுள்ள காணித்துண்டு மற்றும் அதன் மீது அமைந்துள்ள கட்டிடம், மரம் மட்டை, பயிர், பழங்கள், ஆகியவற்றுடன் சகலதும். இது நீர்கொழும்பு காணிப் பதிவகத்தில் H 253/109 இடப்பட்ட இருமடிப்புத் தாளில் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு தற்பொழுது நீர்கொழும்பு காணிப்பதிவகத்தில் H 451/59 இன் கீழ் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் நீர்கொழும்பு, தெவடகஹவத்த, அபோன்சு மாவத்தை, என்ற இடத்தில் வசிக்கும் குருப்பு முதியான்சலாகே சமன்திரிகா பிரியங்கனி விக்ரமசிங்க அல்லது குருப்பு முதியன்சலாகே சமன்திரிகா விக்ரமசிங்க (தேசிய அடையாள அட்டை இல. 666181301V) (இங்கு இதன் பின்னர் ஏதாவதொரு இடத்திற்கு "பிணையாளி" யாக அறியப்படும்) அவர்களால் வங்கி மிகக் கொடுப்பனவு மற்றும் தவணைக்கடன் முறையில் வங்கி வசதிகளைப் பெற்றுக் கொண்டுள்ளதாலும், சொல்லப்பட்ட பிணையாளியினால் பிர சித்த நொத்தாரிசு ஜி.ஏ. எல்.பி. டி. சில்வா அவர்களால் உறுதிப்படுத்தப்பட்ட இலக்கம் 2674 மற்றும் 2018.05.04 ஆந் திகதியிடப்பட்ட ஆரம்ப ஈட்டு முறியை எழுதிக் கையொப்பமிட்டு சொல்லப்பட்ட நிதி வசதிகளின் மீது பதிவு இலக்கம் PB 676 PQ இல் உள்ள யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ மூலம் (இங்கு இதன் பின்னர் ஏதாவதொரு இடத்தில் யூனியன் பாங்க் என அறியப்பட்ட ) க்கு அறவிடப்பட வேண்டிய் பணம் மற்றும் அதன் மீதுள்ள வட்டி மீளளிப்புச் செய்வதற்காக பிணையாக இங்கு மேலே குறிப்பிடப்பட்ட ஆதன இடாப்பில் விபரமாக குறிக்கப்பட்டுள்ள அசையாத சொத்து ஈடு வைக்கப்பட்டு பிணையாக வைக்கப்பட்டுள்ளதாலும், , யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ யினால் எனக்கு அளிக்கப்பட்ட அதிகாரத்தின் பிரகாரம்,

2020 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 07 ஆந் திகதி பிற்பகல் 2.30மணிக்கு
மேற் சொல்லப்பட்ட காணிகளை எங்களால் அதே இடத்தில் பகிரங்க ஏலம் மூலம் விற்பனை செய்யப்படும்.

**காணிக்கு செல்லும் விதம்**.- நீர்கொழும்பு, கொப்பரா சந்தியில் இருந்து மீரிகம நோக்கி 251 மற்றும் 242 பஸ் செல்லும் பாதையில் 1.5 கிலோமீற்றர் பயணித்து "நுகவல" சந்தி வரை வந்து வலது பக்கமாகத் திரும்பி 242 பஸ் பயணிக்கும் நீர்கொழும்பு திவுலப்பிட்டிய வீதியில் அபொன்சு மாவத்தை வரை 350 மீற்றர் வலப்பக்கமாக வந்து வலப்பக்கமாகத் திரும்பி 300 மீற்றர் பயணிக்கும் பொழுது இந்தக் காணியின் வழியாக பயணிக்கும் பொழுது வலதுப்பக்கமாக அமைந்துள்ளது. நீர்கொழும்பு நகரத்திலிருந்து இந்தக் காணி 02 மீற்றர் தூரமாகும்

**கொடுப்பனவு செய்யும் முறை**.- ஏல முடிவில் உத்தேசக் கொள்வனவாளர் பின்வரும் கட்டணங்களை பணமாக ஏலதாரருக்கு செலுத்த வேண்டும்:-

(1) கொள்வனவு விலையின் பத்து (10%) சதவீதம் ;

(2) மிகுதி 90% ஏலத் திகதியிலிருந்து 30 நாட்களுக்குள் யூனியன் பாங்க் பீஎல்சீ பிரதான அலுவலகத்தில் வைப்புச் செய்யப்படல் வேண்டும்;

(3) ஏலதாரரின் தரகும் பணம் இரண்டரை சதவீதம் (2.5%);

(4) உள்ளூராட்சி மன்ற வரி ஒரு (1%) சதவீதம் ;

(5) ஏலத்திற்காக செலவு செய்யப்பட்ட முழு விளம்பரச் செலவுகள் மற்றும் கூறப்பட்ட வேறு செலவுகள் 100%;

(6) இலிகிதர் கட்டணம் 1,500.00ரூபா ;

(7) நொத்தாரிசுக் கட்டணம் 3,500.00 ரூபா .

**வேறு விபரங்களுக்கு**.-"சட்டப்பிரிவுத் திணைக்களம், யூனியன் பாங்க் ஒப் கொழும்பு பீஎல்சீ, இல. 64, காலி வீதி, கொழும்பு -03".

தொலைபேசி இல.: 0112374100.

எல் .பீ. சேனாநாயக்க,
உத்தரவுபெற்ற ஏல விற்பனையாளர்கள்,
மதிப்பீட்டாளர்கள் மற்றும் கொழும்பு
வர்த்தக உயர் நீதிமன்றம், மேல்
